**செய்தி வெளியீடு எண்:908** **நாள்:24.11.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

## நிவர் புயல் காரணமாக தொழிற் பயிற்சி நிலைய (ஐ.டி.ஐ) தேர்வு தேதி யில் மாற்றம்

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின்கீழ் செயல்படும் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு 23.11.2020 முதல் அகில இந்திய தொழிற்தேர்வு நடைப்பெற்று வருகிறது. நிவர் புயல் காரணமாக தமிழ்நாடு அரசு 7 மாவட்டங்களுக்கு முன்னெச்சரிக்கையாக அனைத்து பொது போக்குவரத்துகளும் 24–11–2020 முதல் நிறுத்தம் செய்ய ஆணை பிறப்பித்துள்ளது. இதன் காரணமாக மத்திய அரசு ஒப்புதலுடன் 25–11–2020 முதல் 27–11–2020 வரை நடைபெறவிருந்த அகில இந்திய தொழிற்தேர்வு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 03–12–2020 முதல் 05–12–2020 வரை மாற்றப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**